மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, எவ்வளவுக்கெவ்வளவு விரைவுபடுத்தமுடியுமோ அவ்வளவுக்கெவ்வளவு விரைவுப்படுத்தப்படும்.

குடந்தை மகாமகம் திருவிழா.

702 (*வினா எண். 1472) திரு கி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடந்தையில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வரும் மகாமகம் திருவிழாவை "தேசிய திருவிழாவாக' அறிவிப்பது குறித்து திட்டம் ஏதேனும் உண்டா?

(ஆ) ஆம் எனில், அரசு மத்திய அரசுடன் தொடர்பு கொண்டுள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

சிறியூர்—தெங்குமரஹாடா இணைப்பு சாலை.

703 (*வினா எண். 3603) திரு கே. உச்சி: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் தொகுதி, சிறியூர் என்ற இடத்திலிருந்து தெங்குமரஹாடாவை இணைக்கும் புதிய சாலை அமைக்கும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீட்டு தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு கே. உச்சி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடலூரிலிருந்து, உதகை, மேட்டுபாளையம் வழியாக பவானி சாகர் செல்லும் வழி கிட்டத்தட்ட 125 கிலோ மீட்டருக்கு மேல் ஆகிறது. இந்த சிறியூர் வரை செல்லக்கூடிய வழியில் ஏற்கனவே